# கற்பகம் திங்கள் இதழ்

KATPAKAM

விலை ரூ.10/-

மலர்-01 ஜனவரி-2007 இதழ்-03


**குறள [illegible]தம்-3**

வள்ளுவர் வாய்மொழியை தெரிந்த[illegible] [illegible]ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொட[illegible] குறளமுதை[illegible]ம்.

**அதிகாரம்-1 அறத்துப்பால் -கடவுள் வாழ்த்து**

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

*நினைப்பவர் மனமாகிய மலரில் அமரும் இறைவனின் சிறந்த அடிகளை இடைவிடாமல் நினைப்பவர் இந்நிலவுலகில் நெடுநாள் நிலைபெற்று வாழ்வார்.*

## ★ பனை தென்னை வள அ. கூட்டுறவுச் சங்கங்களை ★

# "வினைத்திறன்" அமைப்பாக மாற்றியமைக்க வேண்டும்!



**கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணியசர்மா**

**தென்கிழக்காசிய நாடுகளில் இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்ததொரு கூட்டுறவு அமைப்பாகத் திகழ்வது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களாகும். இத்தகைய அமைப்பினை கூடிய வினைத்திறன் உள்ள அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டியது சங்க அங்கத்தவர்களின் பாரிய பொறுப்பாகும் என்று வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமான ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

"பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை இவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பிலிருந்து வேறுபட்ட அமைப்பாகும். உற்பத்தியாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இச்சங்கங்கள், தங்களது மூலதனத்திலேயே முற்றுமுழுதாகத் தங்கியுள்ளன. அங்கத்தவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்குச் சேவைகளைச் செய்துவருவதினால் ஆசியாவிலேயே சிறந்த கூட்டுறவு அமைப்பாக இச்சங்கங்கள் திகழ்கின்றன.

இந்நிலையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் மாதிரி விற்பனை நிலையங்களைத் தத்தம் பகுதிகளில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பனை உற்பத்திப் பொருட்கள் அடங்கிய காட்சியகம் ஒன்றையும் பொருத்தமான இடத்தில் அமைக்கவேண்டும். இத்தகைய காட்சியகம் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் முன்பு அமைக்கப்பட்டிருந்தது. இன்றைய சூழ் நிலையில் கிராமிய ரீதியில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, சங்கங்களில் தற்போது இயங்கி வரும் கிராமிய வங்கிகளை நவீனமயப்படுத்தி(அதாவது கணினி மயப்படுத்தி) மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு ஏற்றமுறையில் சாத்தியப்படக்கூடிய நுண்கருத் திட்டங்களைத் தயாரித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் முன்னெடுக்கும் பட்சத்தில் அதற்குரிய நிதியினை பெற்றுத் தருவதற்கு ஆவன செய்துதர நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறினார்.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் பொ.சிவலிங்கம், எஸ்.கனகசபாபதி, மாவட்ட கூட்டுறவு அலுவலர்கள் சு.கணேசு, மு.சின்னராசா உட்பட கூட்டுறவுப் பரிசோதகர்கள், சங்கங்களினதும் சமாச, கொத்தணியினதும் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



**சமாச பதிப்பகத்தில் அச்சிடப்பட்ட, யா.மா.சி.க.கூ.ச.சமாசத்தின் வெள்ளிவிழா மலர் வெளியீட்டு விழா கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது மலரின் முதல் பிரதியை யாழ். அரச அதிபர் க.கணேஷ் அவர்களிடமிருந்து மக்கள் வங்கியின் வட.வலய பொதுமுகாமையாளர் த.க. ஆனந்தராசா அவர்கள் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.**


**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

அங்கத்தவர்கள், பணியாளர்கள், மற்றும் அனைத்து கூட்டுறவாளர்களுக்கும்



"கற்பகத்தின்" இதயம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**கற்பகத்தின் 2008ம் ஆண்டுக்கான வர்ண நாட்காட்டி உள்ளே....**


### "பரிந்துணர்வை ஏற்படுத்தும் ஒன்று கூடல்" -கூட்டுறவு அலுவலர் மோகன்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தமது ஜீவனோபாயத்திற்காக மட்டும் பணிபுரியாது சங்கத்தினது அபிவிருத்தியையும் கவனத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும் என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அலுவலர் பொ.மோகன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பணியாளர் நலன்புரிச் சங்க ஒன்றுகூடல் நிகழ்வின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாச மண்டபத்தில் ஊழியர் நலன்புரிச் சங்க தலைவர் ஆ.செம்பொற்சோதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது, (8ம் பக்கம் பார்க்க)

★ "கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்" ★

# நெறியாளர்குழுக் கூட்டங்களின்போது சமர்ப்பிக்கப்படும் சபைப் பத்திரத்தின் அவசியம்

ஒரு கூட்டுறவுச் சங்க நெறியாளர்குழு ஒரு குறிப்பிட்ட விடயத்தை விரைவாகவும், சுலபமாகவும், தெளிவாகவும் பரிசீலனை செய்து அவ்விடயம் தொடர்பாக சிறந்த சட்ட ரீதியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு தேவையான, அவ்விடயத்துடன் தொடர்புடைய, தகவல்கள் யாவற்றையும் போதிய ஆதாரங்களுடனும், புள்ளி விபரங்களுடனும், தகுந்த தீர்வுகளுடனும் சங்க முகாமைமட்ட உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டு சங்க நெறியாளர் குழுவுக்கு வழங்க வேண்டிய ஒரு ஆவணமே "சபைப் பத்திரம்" ஆகும்.

ஒரு விடயத்தில் தீர்மானம் எடுக்கும் முழு அதிகாரமும் சங்க நெறியாளர்குழுவிடம் உண்டு. இவர்கள் குறித்த விடயத்தை பூரணமாக ஆராய்ந்து சிறந்த தீர்மானத்தை எடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். மேலும் விரிவாக ஆராய நெறியாளர் குழுவுக்கு நேரம் இல்லை. மாதாந்தம் இரண்டு அல்லது மூன்று தடவை மட்டுமே இவர்கள் கூட்டம் கூடுவார்கள். இக் கூட்டங்களில் பல விடயங்கள் ஆராயப்படவேண்டியதாக இருக்கும். நெறியாளர் குழு உறுப்பினர்கள் மூன்று வருடத்திற்கு ஒரு தரம் மாறிமாறி வருவதாலும் சங்கத்தில் தொடர்ந்து இருக்காமையினாலும் சங்க நிகழ்வுகளின் வரலாற்றைப் பூரணமாக அறிந்திரார். பாரிய முகாமைப் பிரச்சினைகளை அணுகித் தீர்வு காணப் போதுமான முகாமை அறிவு அற்றவர்களாக இருக்கின்றனர். ஆதலால் நெறியாளர்குழு உறுப்பினர்கள் வேண்டிய ஆலோசனைகளையும் சிறந்த தீர்மானங்களையும் எடுப்பதற்குகந்த ஆலோசனைகளையும் தகவல்களையும் முகாமைப் பணியாளர்கள் சபைப்பத்திரம் மூலம் வழங்கினால் நெறியாளர்குழு தீர்மானங்களை விரைவாகவும், சுலபமாகவும் மேற்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்ட சபைப் பத்திரம் தீர்மானம் செய்தலின் ஊன்றுகோலாகும். சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும். தீர்மானத்தால் ஏற்படும் நட்டங்களும் தவறுகளும் நீக்கப்படும். சங்கம் இலாபகரமாகவும் சிக்கனமாகவும் இயங்க வழிவகுக்கும். வேலைகள் யாவும் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெறும். கொள்வனவு, உற்பத்தி, விற்பனை போன்ற நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறும். நெறியாளர் குழுவின் தவறான தீர்மானங்களால் ஏற்படும் இழப்புக்களை தவிர்த்துக்கொள்வதற்கு சபைப் பத்திரம் உதவும்.

க.ப.லோகநாதன்,-
கல்வி உத்தியோகத்தர்,
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மேற்பார்வையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள்

- மேற்பார்வையாளர் எப்போதும் சங்கத்தினதும் உறுப்பினர்களினதும் முன்னேற்றத்தில் அக்கறையுடையவராக இருத்தல் வேண்டும்.
- தொழில்சார் அறிவும் அது தொடர்பான விசேட ஆலோசனை வழங்குபவராகவும் இருத்தல் வேண்டும்.
- தவறுகளைத் திருத்திக்கொள்ள வழிகாட்டும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்.
- எப்போதும் பக்கச் சார்பின்றி நடுநிலையாளராக இருத்தல் வேண்டும்.
- மேற்பார்வைக்கு உட்படுபவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உட்படாதவாறும், மேற்பார்வையின் நோக்கத்தை விளங்கக் கூடியவாறும், செயற்பாடுகளை முன்னெடுப்பவராக இருத்தல் வேண்டும்.
- அங்கத்தவரின் தொழிற்பாடுகளுக்கு ஒத்துழைப்பவராகவும் தனது அதிகார பலாத்காரத்தை காட்டாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக ஊக்கமளிக்கும் ஒரு ஊக்குவிப்பாளராக இருத்தல் வேண்டும்.
- மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்புள்ளவராகவும், பிரச்சினைகளை இலகுவாக தீர்க்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- எப்போதும் சுறுசுறுப்பானவராகவும் திடகாத்திரமானவராகவும் இருத்தல் வேண்டும்.
- திறனான அறிக்கை செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த பரிசோதனை மேற்கொள்ளும் ஆற்றலும் நுண்ணறிவும், துரிதமான செயற்பாடும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- கிளை நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முழு விபரங்களையும் நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- நுகர்வோரின் தேவைகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- பணித் தொகுதியினரை சிறந்த முறையில் வழிநடத்தக் கூடியவராகவும் வினைத்திறனாக செயற்படக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- நிறுவன நோக்கத்தை அடைவதற்காக எப்போதும் ஒத்துழைப்பவராகவும் முகாமைக்கு கீழ்ப்படிபவராகவும் இருத்தல் வேண்டும்.
- நிறுவனம் பற்றிய போதிய அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

வல்லைவாசன்,
அச்சுவேலி.



## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவியுயர்வு!

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய அருந்தவராசா வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று சென்றுள்ளார்.

இவர் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களில் நீண்ட காலம் கூட்டுறவுப் பரிசோதகராகவும் பின் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகராகவும் அதன் பின்னர் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராகவும் பதவியுயர்வு பெற்று அப்பதவிகளை சிறப்பான முறையில் அலங்கரித்து வந்துள்ளார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம் தொய்வு நிலையில் இருந்தபோது அதன் கூட்டுறவுப் பரிசோதகராக கடமைப் பொறுப்பேற்று சமாசத்தின் வளர்ச்சிக்காக பணியாளர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்படுத்தி. பாரிய நட்டத்தில் இயங்கி வந்த அச்சகப் பகுதியை புனரமைப்பு செய்து அச்சகத்தினை இலாபகரமாக இயங்கச் செய்தவராவார்.

இவர் சங்க அங்கத்தவர்களின் நலன்கருதி அவர்களது பிற்கால வாழ்க்கையை சீராக நடத்துவதற்கு சமாசத்தினூடாக விபத்து ஓய்வூதிய நலத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுத் தருவதில் முன்னின்று உழைத்தவராவார்.



வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணியில் நீண்டகாலம் பணியாற்றிய திரு.செ.குணபாலசிங்கம் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவின்போது கொத்தணி பணியாளர்களுடன் இணைந்து எடுக்கப்பட்ட படம்.

# வளர்ச்சிப் பாதையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

முற்றொடர்..........

சமாசத்தின் நலத்திட்டங்கள் பின் வருமாறு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பாரிய திட்டமாக விபத்து ஓய்வூதிய நலத்திட்டம் காணப்படுகிறது. இது தொடர்பாக சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். அடுத்தது கல்வி அபிவிருத்தித் திட்டம். இத்திட்டத்தில் அனைத்து உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்கள் பணியாளர்கள் உள்வாங்கப்பட்டு, சுமார் 5,000க்கு மேற்பட்டவர்களது பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்புக்காக ஒரு மாணவருக்கு ரூபா 300 பெறுமதி வாய்ந்த பாடசாலை உபகரணங்கள் ரூபா 150,000.00 (லட்சத்து ஐம்பதாயிரம்) ற்கு வருடம் தோறும் பெற்று வழங்கி வருகின்றது. மேலும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அங்கத்தவர் பணியாளர்கள் பிள்ளைகளுக்கு ரூபா 5,000 (ஐயாயிரம்) வங்கியில் வைப்புச் செய்து பாஸ் புத்தகம் வழங்கி வருகிறது. அத்தோடு சமூகம் சார்ந்த நலத் திட்டங்களாகவும் சுகநலத் திட்டங்களாகவும் அதாவது அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு லயன்ஸ் கழகத்தின் உதவி மூலம் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. உறுப்புரிமைச் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள் 19 சங்கங்களிலும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும் செயற்பாடு வருடாந்தம் சமாசத்தால் நடத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாது பனையியல் கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ரூபா 10,000 (பத்தாயிரம்) வழங்கியமையும் மேலும் பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களுக்கு வெல்ல மானியம் அதாவது, அத் தொழிற்பாட்டில் ஈடுபட்டு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தினை சந்தைப்படுத்தலில் சங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தினை சமாசம் ஈடுசெய்யும் வகையில் சமூகநல நிதியில் இருந்து வழங்கி வருகின்றது. மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை வாழ் அங்கத்தவர்களுக்கு சுனாமி பாதிப்புக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கி அவர்களது துயர் போக்கியது சமாசம். மேலும் தற்போது நாட்டில் அசாதாரண சூழ்நிலையினால் போக்குவரத்து தடைப்பட்டமையால் சங்கங்கள் காகிதாதி உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்கள், சோடா மூடி ஏனைய உபகரணங்கள் அரச அதிபர் ஊடாக கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து கப்பல் மூலம் தருவித்து குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனால் சங்கங்கள் பெரியளவில் அனுகூலங்களைப் பெறுகின்றன.

கணினி மயப்படுத்தப்பட்ட சமாச கணக்குப் பகுதியும் ஒவ்செற் இயந்திரங்கள் மூலம் காகிதாதி தேவைகளை நிறைவு செய்தமையும் ஏனையவற்றுக்கு நாட்காட்டிகள், மலர்கள் மற்றும் அச்சகவேலைகளையும் குறைவான செலவில் செய்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் கல்வி விரிவாக்கல் திட்டங்களை மாதாந்தம் கல்வி உத்தியோகத்தர் மாதாந்த மகாநாட்டில் கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து கூட்டுறவுக் கல்விப் பயிற்சிகள் நடாத்த திகதிகள் தீர்மானித்து சமாசக் கல்வி அலுவலர் மூலமும் கல்வி புகட்டும் பணியினை சமாசம் மேற்கொண்டு வருகின்றது.

## வலிகாமம் கொத்தணி மட்டத்திலான செயற்பாடுகள்:-

வலிகாமம் கொத்தணியில் 7 பனை தென்னை வளச் சங்கங்கள் இணைந்துள்ளன. இதில் பாலர் முன்கல்வி செயற்பாட்டிற்கு கொத்தணி சத்துணவு, மாணவர்களுக்கு இலவச சீருடை, ஆசிரியர்களுக்கு சீருடை, விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி வருகின்றது.சுமார் 3000 மாணவர்களும் 150 ஆசிரியர்களும் கல்வி செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு அங்கத்தவர்கள் பணியாளர்கள் நலத் திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கான நிதியினை ஏற்கனவே ஒதுக்கங்கள் மூலம் ஒதுக்கி வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

## எதிர்காலத் திட்டங்கள்:

சமாசம் எதிர்காலத்தில் மகளிர் குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு சுய தொழில் பயிற்சிகள் வழங்கி அவர்களை பொருளாதார வளம் மிக்கவர்களாக்குதல், சமாசத்தால் நடாத்தப்படும் திக்கம் வடிசாலையினை நவீன மயப்படுத்தி ஒவ்வொரு அளவிலான வெவ்வேறு அழகான வடிவமைப்புக்களில் திக்கம், சமாசம் பெயர்கள் பொறிக்கப்பட்டு போத்தல்களில் சாராயம் உற்பத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு தரமானதாக மாற்றுதல், இதற்கான தொழில் நுட்பங்களை இது தொடர்பான நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளுதல்.

-வளரும்-

**-வ.சிவகுமார்-**



பண்டத்தரிப்பு ப.தெ.வ. அ.கூ.சங்கம் அண்மையில் நடத்திய மதிப்பளிப்பு, புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வுகளில் கூட்டுறவுப் பாரிசோதகர் எஸ்.விஜய மோகன்ராஜா அங்கத்தவர் ஒருவருக்கு பரிசில் வழங்குதை படத்தில் காணலாம்.



பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம், UNDP அனுசரணையுடனும் பனை அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடனும் நடத்திவரும் பன்ன வேலை பயிற்சி ஆரம்ப நிகழ்வில் சங்கத்தின் பொது முகாமையாளர் உரையாற்றுவதையும், பனை அபிவிருத்திச்சபையின் கல்வி விரிவாக்கல் அலுவலரையும் பயிற்சி பெறும் மாணவிகளையும் படத்தில் காணலாம்.

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் நிலை

**சென்ற இதழ்த் தொடர்ச்சி.......**

அங்கத்தவர்களின் சேமிப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தற்போது பல புதிய நலத்திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் நிதிப்பலத்தை உள்வாங்கி சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கும் அவர்தம் குடும்பத்திற்கும் பல சேவைகளை ஆற்றி வருகின்றன. அந்த வகையில் புலமைப் பரிசில் (5ம் ஆண்டு) திட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் உதவு தொகைகள் வழங்கி அவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தி ஒரு அறிவுசார் மூலதனமாக இந்நாட்டிற்கும் தமக்கும் உழைக்கக் கூடியவர்களாக அவர்களை வளர்த்தெடுக்க உழைக்கின்றன. அங்கத்தவரின் பிள்ளையாக இருந்தாலும் சரி, பணியாளரின் பிள்ளையாக இருந்தாலும் சரி இந்நிறுவனங்களின் மூலம் மூன்று சந்தர்ப்பங்களில் உதவுதொகையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்தோடு ஒரு சந்தர்ப்பத்தில் சித்தியடையும்போது சங்கத்தின் உதவு தொகையையும் அதே நேரம் கொத்தணியின் உதவு தொகையையும் அதே நேரம் சமாசத்தின் உதவு தொகையையும் ஒரு மாணவன் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் ஒரு கட்டுமானத்தினூடாக பல கட்டமைப்புக்களை உருவாக்கி உறுப்பினர்களின் சமூக, பொருளாதார, கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை அபிவிருத்தி செய்து வருகின்றன என்றால் அது மிகையாகாது.

**சமாசத்தின் செயற்பாடு:-**

இது ஒருபுறம் இருக்க, தமது வேலைகளை இலகுபடுத்துவதற்கு சங்கங்கள் இணைந்து உருவாக்கிய வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்க சமாசமானது கடந்த காலங்களைவிடவும் தற்காலத்தில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தி செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. அதாவது எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்ததோ அதை விடுத்து வேறு திசையில் இயங்காது, காலத்தின் தேவை கருதி தமது உறுப்புரிமைச் சங்கங்களின் தேவைகளை இனம்கண்டு அத்தேவைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்காக அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு கப்பலின் மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்கி வருகின்றது. A9 பாதை மூடப்பட்ட பின்னர் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் போத்தற் கள்ளு உற்பத்திக்கு தேவையான மூடிகளுக்கு குடாநாட்டில் பெருமளவு தட்டுப்பாடு நிலவி வந்தது. இதனால் சங்கங்கள் மிகையான உற்பத்திக் காலத்தில் போத்தலில் கள்ளை அடைத்து பதப்படுத்தி வைப்பதற்கு முடியாத சூழ்நிலை உருவாகத் தொடங்கியது. அதுமட்டுமல்லாது சங்கங்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கும், படிவ ரீதியான கட்டுப்பாடுகளிற்கும் வேண்டிய காகிதாதிகளைக் கூட கொள்வனவு செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியது. இவ்வாறான காலகட்டத்தில் சமாசம் மேற்கொண்ட துரித நடவடிக்கை மூலம் கப்பலில் இப்பொருட்களை ஏற்றி வந்து அங்கத்துவ சங்கங்களுக்கு விநியோகித்து வந்தது. இவற்றிற்கெல்லாம் ஒத்துழைப்பு வழங்கிய கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் அரசாங்க அதிபருக்கும் சங்கங்களும் அங்கத்தவர்களும் முதற்கண் நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும்.

மேலும் சங்கங்கள் இவ்வருடம் மிகையாக உற்பத்தி செய்த கள்ளை திக்கம் வடிசாலை மூலம் பெற்று அதனை மதுசாரமாக உற்பத்தி செய்து சங்கங்களின் நெருக்கடி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்கியதில் சமாசத்தின் பங்கும் அளப்பரியது. அத்தோடு கொள்வனவு செய்யப்பட்ட கள்ளுக்கு இவ்வருடம் செறிவுக்கு 3/- (மூன்று ரூபா) என்ற வீதத்தில் சங்கங்களுக்கு பணத்தை வழங்கி நட்டத் தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஏற்கனவே செறிவுக்கு வழங்கப்பட்ட 1.30/- (ஒரு ரூபா முப்பது சதம்) இவ்வருடம் மேலும் 1.70/- (ஒரு ரூபா எழுபது சதம் ) ஆல் அதிகரித்து வழங்கப்பட்டது. இதனால் அங்கத்தவருக்கு ஏற்படவிருந்த நட்டம் பல மடங்கால் குறைக்கப்பட்டது. இவ்வாறு உறுப்பினர்களுக்கும் சங்கங்களுக்கும் பல வழிகளிலும் நன்மைதரக் கூடியவாறு சமாசமானது வினைத் திறனுடன் செயற்படுவது எதிர்காலத்தில் "கூட்டுறவில் கூட்டுறவு" என்னும் உயர்ந்த கொள்கையானது வலுப்பெறவும் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் நிறைவேறவும் உறுதுணையாக இருக்கும்.

அது மட்டுமல்லாது இவ்வாறான நெருக்கடி மிக்க போர்க்கால சூழ்நிலையிலும் அங்கத்தவர்களின் எதிர்கால நன்மைகருதி சமாசத்தால் முன்னெடுக்கப்பட்ட விடத்து ஓய்வூதிய நலத்திட்டமானது இன்று நடைமுறைப்படுத்தக்கூடியவாறு வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய திரு.ஆ.சுப்பிரமணியசர்மா அவர்களினால் அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது அங்கத்தவர்களின் எதிர்கால வாழ்விற்கு பல வழிகளிலும் நன்மையளிக்கக் கூடியதாக காணப்படுகின்றது. ஓய்வு காலத்திலும் அங்கத்தவர் வேதனம் பெறக் கூடியதாக அமைந்துள்ளது. இவ்வாறு செயற்பாடுகள் யாவும் நேர்த்தியாகவும் உறுப்பினர்களின் நன்மை கருதியும் மேற்கொள்ளப்படுவது ப.தெ.வ.அ.கூ. நிறுவனங்களுக்கும் இவ்வாறான காலகட்டத்தில் காகிதாதிகளை வழங்கி குடாநாட்டில் நிலவி வந்த காகிதாதி தட்டுப்பாட்டை சமாசமானது ஓரளவு குறைத்து வருகின்றது. எது எவ்வாறாயினும் இன்றைய தனியார் மயமாதல் அடிப்படையில் உலகம் வேகமாக மாற்றத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் தாங்களும் இயைபாக்கம் அடைந்து காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை உள்வாங்கி செயற்பட முடியும் என்பதனை ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்கள் இன்றைய காலகட்டத்தில் உணர்த்தி நிற்கின்றன.


-வளரும்-

**-வல்லைவாசன்-**



மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரின், பனம் விதை நாட்டும் நிகழ்வு அண்மையில் சங்கத் தலைவர் அ.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் எஸ்.கணேச, சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.சற்குணலிங்கம், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாச பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரெட்ணம், வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாளர் க.சுதாகரன் மற்றும் கொத்தணி பணியாளர்கள், ஆனைக்கோட்டை கிராம அலுவலர் வை.சந்திரராசா, சங்க செயலாளர் அ.குணசீலன், நெறியாளர் குழு உறுப்பினர்கள், பணியாளர்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர், காக்கைதீவு முத்தமிழ் சனசமூக நிலையத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## வாசகர் திருமுகம்



**அழகுற வெளிவரும் "கற்பகம்"**

கைக்கடக்கமான முறையில் அழகுற வெளிவருகிறது "கற்பகம்" பத்திரிகை. அத்துடன் எழுத்துக்கள் சரியான முறையில் சரிபார்க்கப்பட்டு சொற்பிழை இல்லாமலும், பணியாளர்களின் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவருவதையிட்டும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-வி.மாலினி-

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கல்விச் செயற்பாடுகள்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்களைக் கடந்துள்ள போதும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாக கல்வி, மற்றும் சேமிப்புத் துறைகளில் முன்னேற்றம் இன்மையால் உறுப்பினர்களின் வருமானம் வீண்விரயமாகும் நிலையும், இவர்களது வாழ்நிலை வளர்ச்சியுறாது காணப்படுவதுடன் வறுமைக்கோட்டிற்கு கீழேயே வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு ஏதுநிலையே காணப்பட்டது. அத்துடன் சீவல் தொழில்புரிவோர் சமூகத்தில் ஒதுக்கப்பட்டு பின்தள்ளி வைக்கப்பட்டதுடன், தாம் செய்யும் தொழிலுக்கு நியாயமான வருமானம் பெறுவதற்கோ தொழிற்படும் காலங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்கு போதிய காப்பீடுகள் பெற்றுக்கொள்வதற்கோ வழிவகைகள் தெரியாது இருந்து வந்துள்ளனர். இதற்குக் காரணம் கடந்த காலங்களில் இவர்களுக்கான முறையான கல்வி நலத்திட்டங்கள் மேற்கொள்ளப் படாதமையே முக்கிய குறைபாடாகக் காணப்பட்டு வந்தது.

மேலும் உழைப்பாளியை அந்தக் குடும்பம் இழக்க நேர்ந்தால் மனைவியோ அல்லது அந்தக் குடும்பத்திலுள்ள கல்வி கற்றுக் கொண்டிருக்க வேண்டிய வயதிலுள்ள பிள்ளையோதான் குடும்ப பாரத்தினை ஏற்று வருவாயினைத் தேடி வாழவேண்டிய சூழலும் இருந்து வந்தது. இதனால் போதிய கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் சேமிப்புத் தன்மையை அறியாதவர்களாகவும் மாறி அன்றாடங் காய்ச்சிகளாகவும் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்ந்து வந்தனர். இவைதான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் அன்றைய வாழ்வியல் நிலை.

இந்நிலைமைகளை இல்லாதொழிக்கவும் அவர்களது வாழ்வியல் நிலையை உயர்த்தி வைக்கவும் இன்று ஒவ்வொரு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் கல்வி நலத்திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களிற் கூடாக தத்தமது அங்கத்துவ உறுப்பினர்களையும் அவர்களைச் சார்ந்த குடும்பங்களையும் வாழ்வியலில் சிறக்க வைக்க, மேம்படுத்த அயராது பாடுபட்டு திருப்திகரமான முன்னேற்றத்தையும் கண்டு வருகின்றன. இத்திட்டங்களானது ஆரம்பத்தில் சங்க நிதிகளின் மூலமே நிறைவேற்றப்பட்டு வந்ததினால் போதிய நிதி ஒதுக்கமின்மையினால் எதிர்பார்த்த வெற்றியினை அடைய முடியாத நிலை ஏற்பட்டதனை அவதானித்த கூட்டுறவு வல்லுநர்கள் ஒவ்வொரு சங்கத்தினதும் நிதிச் சுழற்சிக்கேற்ப கல்வி நிதி ஒதுக்கங்களை உருவாக்கி அதன் மூலம் உறுப்பினர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் உச்ச பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கல்வி நலத்திட்டங்களையும் பல வகையான சேமிப்புத் திட்டங்களையும் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளன. இதனால் இவர்களது இன்றைய வாழ்வியல் நிலை அன்றைய வாழ்வியல் நிலையில் இருந்து விலகி சமூகத்தில் உள்ள ஏனையவர்களைப் போலவே பொருளாதாரத்திலும் சேமிப்பிலும் கல்வியாற்றலிலும் உயர்வடைந்து காணப்படுகின்றார்கள் என்றால் அதற்கான முழுப்பங்களிப்பையும் இந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே அதன் கல்வி நலத்திட்டங்களினூடாகச் செய்து நிற்கின்றன என்றால் அது மிகையாகாது.

**திரு.சு.சிவலிங்கம்,** கல்வி அலுவலர்,
**ப.தெ.வ.அ.கூ.சங்கம், கோண்டாவில்.**

# அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடைமுறை விதி

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அங்கத்துவ சங்க அங்கத்தவர்களுக்கான விபத்து ஓய்வூதிய நலத்திட்டம் 1979ம் ஆண்டு சமாசம் உருவாக்கப்பட்டபோதே சிந்தனையில் இருந்து 1980ம் ஆண்டு உதயமாகியது.

## நோக்கம்:-

ஆரம்ப சங்கத்தின் அங்கத்தவர் ஒருவரும் பனை தென்னை மரங்களில் சாற்று உற்பத்தியில் ஈடுபடும் போது அல்லது இவ்வளங்களை உற்பத்திக்காகப் பயன்படுத்தும்போதும் தொழிற்படும் காலத்தில் ஏதேனும் வகையில் விபத்துக்குள்ளாகி தொழிற்பாதிப்பு ஏற்படும்போது தொழில் நட்ட இழப்பீட்டுக்கும் புனர்வாழ்வுக்கும் ஈடுசெய்யும் வகையிலும் வயது மூப்பு அல்லது சொந்த விருப்பின் பேரில் தொழிலில் இருந்து ஓய்வுபெறும்போதும் அவ் அங்கத்தவர் தனது தொழிற்படும் காலத்தில் இத்திட்டத்திற்கு செலுத்திய பங்களிப்புக்கு ஏற்ற வகையில் மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்தை கொண்டதாக இத்திட்டம் அமைந்துள்ளது.

## அங்கத்துவம்:-

ஒவ்வோர் ஆரம்ப சங்கங்களிலும் அச்சங்கங்களின் துணைவிதிக்கு அமைவாக அங்கத்தவராக அனுமதிக்கப்பட்ட சகலரும் இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இவ் ஏற்பாடுகளுக்கு சங்க நிர்வாகமே பொறுப் புடையதாக வேண்டும்.

## திட்டநிதி:-

அங்கத்துவம் பெற்ற அங்கத்தவர்கள் சங்கத்திற்கு வழங்கும் சகல உற்பத்திப் பொருட்களுக்கும் கொள்வனவுப் பெறுமதியின் ஒரு வீதத்தை அவ்வவ் சங்கங்கள் அங்கத்தவர்களிடம் இருந்து அறவீடு செய்யும், அதற்கு சமமான தொகையை சங்கங்கள் உதவு தொகையாக வழங்குவதன்மூலம் உருவாக்கப்படும் திரண்ட நிதியை மாதாந்த அடிப்படையில் அங்கத்தவர்களின் விபரப்பட்டியலுடன் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் சமாசத்தின் விபத்து ஓய்வூதியத் திட்டப் பிரிவிற்கு காசோலை மூலம் அனுப்புதல் வேண்டும். காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் நடைமுறையில் உள்ள வங்கி வட்டி வீதத்திற்கு அமைய நிலுவைத் தொகைக்கு வட்டியுடன் சேர்த்து தண்டக் கட்டணமாக அறவிடப்படும். தொடர்ச்சியான மூன்று மாதங்களுக்கு விபத்து நிதி சந்தா நிலுவையில் இருப்பின் அத்தகைய சங்கங்களுக்குரிய விபத்துக் கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் படும்.

மாதாந்தம் நிகழும் சகல நெறியாளர் குழுக் கூட்டங்களின்போதும் இவ்விபத்து நிதி சமாசத்திற்கு அனுப்பி விடுவது தொடர்பான தகவல் உறுதி செய்யப்படுவதற்கு ஏதுவாக நிகழ்ச்சி நிரலில் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஆரம்ப சங்கம் ஒழுங்காக நிதிப்பங்களிப்பை சமாசத்திற்கு செலுத்திவர தவறுவதனால் குறித்த சங்கத்தின் அங்கத்தவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உரிய நிவாரணத்தினை சமாசம் வழங்கிக் கொள்வதில் ஏற்படக்கூடிய தடங்கல்களுக்கு ஆரம்ப சங்கமே பொறுப்புடையதாகும்.

## கணக்கு வைப்பு:-

இத்திட்ட உறுப்பினர்களின் மாதாந்த வரவுகள் அங்கத்தவர்களுக்குரிய தனியார் பேரேட்டில் சரிவரப் பதிந்து பேணிவருவதில் சமாசம் பொறுப்புடையதாதல் வேண்டும். அங்கத்தவர் இலக்கம், விபத்து ஓய்வூதியத்திட்ட இலக்கம் ஆகிய பூரண விபரங்களுடனான அங்கத்துவ மாதாந்த சந்தாப் பட்டியல் சங்கத்தால் சமாசத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு அமைய முற்கூறிய பதிவுகள் சமாசத்தால் பேணப்படல் வேண்டும்.

**-வளரும்-**

## வரவேற்கிறோம்

கற்பகம் திங்கள் இதழுக்கு ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களிடமிருந்து படைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகிறது. கவிதைகள் 12 வரிகளுக்கு மேற்படாமலும் கட்டுரைகள் புல்ஸ்காப் தாளில் 3 பக்கங்களுக்க மேற்படாமலும், குட்டிக்கதைகள் ஒரு பக்கத் திற்கு மேற்படாமலும் மற்றும் பொது அறிவு விடயங்களை புல்ஸ்காப் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## தைமகளே நீ வருக!



தை மகளே நீ வருக! தரணி எல்லாம் சிறக்க
பொய் முகத்திரை கிழித்து பூவுலகம் சிரித்திடவே!

கையசைத்து விடை கொடுப்போம் சென்ற ஆண்டதற்கு
வையகத்தில் விட்டு சென்ற துன்பமும் துயரமும்
வழிவிட்டு விடை கொடுக்க புத்தகத்துடன் படியேறும் மாணவரும்
வையகத்தை வியர்வை சிந்தி வாழ வைக்கும் உழைப்பாளியும்
கைத்தடியில் துணையுடனே கால் பதிக்கும் முதியவரும்
காணத் துடிக்கும் அமைதியும் நிம்மதியும் சமாதானமும் சுமந்து
தைமகளே நீ வருக! தரணி எல்லாம் சிறக்க!

*யாழ்நகர் கி.தவம்*

## அழகு தேவதை



"கனிவான வதனத்தாய்
கண்ணிலே ஒளியுடையாய்
கருங்கூந்தல் அழகுடையாய்
காட்சிக்கு இனிதுடையாய்
புனிதமான ஒளிநுதலாய்
புகழேணியேறி நின்றாய்
புவி வாழ்வு முடித்துவிட்டு
புத்துலகு புகுந்தனையோ
அழகு தேவதையே"

-மா.சுபா-




## காலம்தானே!



கூட்டுறவாளர் என்போம்
கூடியே உழைப்போம் என்போம்
நாட்டினில் ஏதும் என்றால்
நாமுங்கள் வரிசையென்போம்
முன்னவர் பொருளைப்பெற்று
பின்னவர் பிதற்றி விட்டு
பிரிவதும் காலம்தானே!

பங்கிடும் அட்டைகொண்டு
பகிர்ந்திடும் பொருட்கள் யாவும்
பணமுள்ளோர் பெற்றுச் செல்ல
பணமிலை கொண்ட மக்கள்
பிந்தினால் எடுப்பதற்கு
தந்திட முடியாதென்னும்
தரமிலா வார்த்தை கேட்டு
நொந்திடும் ஏழை உள்ளம்
நொருங்குதல் காலம் தானே!

மின்னுகின்ற மின்விளக்கும்
மிகையான மின்வெட்டும்
பள்ளிச் சிறுவர்க்கு
படிப்பதற்கு இது சாட்டு
மின்னைக் களவெடுப்போர்
மிகையாகிப் போனதனால்
மின்னுகின்ற மின்விளக்கும்
மிகையான மின்வெட்டும்
கள்வர்க்கு துணை போதல்
எம்மவரின் காலம்தானே!

-இ.இலட்சுமி-
(கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச.)

## கல்வியின் மகிமை



அகிலத்திற்கெல்லாம் அருட்கொடையுரிய-எம்
அனைவருக்கும் ஆண்டவன் தந்தான் கல்விதனை
அகிலம் யாவும் என்றும் அழிந்தாலும்-என்றும்
அழியாதிருக்கும் அருட்கொடை கல்வியாகும்

கற்றவர்க்கு என்றுமே மதிப்பாயிருக்கும்-அதன்
காலடிதனில் உலகமே மண்டியிடும்
மற்றவர் போலவர் நிதம் இல்லாமல் இந்த மண்ணினில்
அவரோ என்றும் ஜொலித்திருப்பார்

பெறுவோம்! பெறுவோம் மேன்மைக்
கல்விதனைப் பெற்று -அதில்
பெருமை சேர்ப்போம் எம் வாழ்வுதனில் நிலைக்க
தருவோம்! தருவோம்! கற்ற கல்விதனை அகிலத்திற்கு
அதில் தரணி வாழ் அனைவருக்கும் ஒளி பிறக்கும்

-சி.ஜோ.கொன்விக்ரர்-
கல்வி உத்தியோகத்தர்,
(பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.ச.)

## பாரினில் கைத்தொழில் புரட்சி



அன்னையவள் தன் மக்களை அரவணைத்து
ஆதரித்து கொள்வது போல் அகிலமாதா தம் மக்களை
அகிலமே வியக்கும் கூட்டுறவு அமைப்பின் வாயிலாக
அரவணைத்து ஆதரித்துக் கொள்கின்றாள்
பொது மனப்பாங்கு கொண்டவரின் பொதுவான நோக்கில்
ஆக்கப்பட்டவற்றுள் பொறித்தொகுதியின் வருகையால்
பொதுநிலைபேண் தன்மைகள் போக்கிழந்து போயின
பதினேழாம் நூற்றாண்டில் பாரினில் பண்ணையிலும்
ஆலையிலும் உழைத்தவரின் வயிறு பட்டினியால் வாடின
ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது
என்பதை அனுதினமும் வாழ்க்கையில்
அனுசரித்து வந்த தொழிலாளரின்
ஆதிகால இனிய பழக்கத்தை அழுக்குலைத்து
கூட்டமாகத் தொழிலாளர் கூடி உழைத்த நிலைமாறி
கூலிகளின்வேலை நேரம் அதிகரிக்க
கூடுதலானோர் வறுமையில் வாடினர்
பாரினிலே கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதால்.

-மடத்துக்கடவையான்-

## ஏதுவும் இல்லை

எழுத எனக்கு பேனாவுண்டு!
எழுத்து தமிழில் பலவும் உண்டு!
கையில் வெள்ளைப் பேப்பர் உண்டு!
கைவசம் சொற்கள் எதுவும் இல்லை!

சிந்திக்க எனக்கு ஆற்றல் உண்டு!
சிந்தனை யாவும் மனதில் உண்டு!
சொந்தமாய் என்னிடம் கவிதை உண்டு!
சொத்தென்று சொல்லிட எதுவுமில்லை!

மங்கையை நேசிக்கும் மனமும் உண்டு!
மற்றவர் மனதினை மதிப்பது உண்டு!
பண்புள்ள மனிதனாய் வாழ்வது உண்டு!
பற்றுறென்று உலகினில் எதுவும் இல்லை!

கற்றவர் அறிவுரை கேட்பது உண்டு!
கல்வியை நாளுமே மதிப்பதுண்டு!
சொந்தங்கள் ஊரிலே பலவுமுண்டு!
சொந்தமாய் வாழ்விலே எதுவுமில்லை!

வள்ளுவன் குறளது கேட்டதுண்டு!
வல்லமை என்னிடம் கூட உண்டு!
மாற்றங்கள் உலகினில் பலவுமுண்டு!
மாறிட என்னிடம் எதுவுமில்லை!

போதித்த கருத்துக்கள் கேட்டதுண்டு!
போற்றிய அறிஞர்கள் பலருமுண்டு!
கருத்துகள் சொல்லிட எண்ணமுண்டு!
கல்விதான் என்னிடம் எதுவுமில்லை!

**அச்சுநகர் அச்சுதன்**

## தாயுள்ளம்



பத்துமாதம் தவமிருந்து
தவப்பிள்ளை பெற்றவளே!
இன்று நிற்கும் வீதியிலே
இராணியாகத் திரிந்தவளே!

தந்தையற்ற பிள்ளையென்று
பாசமூட்டி வளர்த்தவளே!
தன் உடலை வருத்தி நின்று
மகன் உயிரைக் காத்தவளே!

ஆசையுடன் அரவணைத்து
மருமகளைச் சேர்த்தவளே!
அடுக்களையில் தானிருந்து
அறுசுவைகள் செய்தவளே!

வாஞ்சையுடன் தேடி வந்து
பல கதைகள் சொன்னவளே!
காவலனவன் செயல் அதனால்
மூப்படைந்து நின்றவளே!

நரை விழுந்த காரணத்தால்
வீதிக்கே வந்தவளே!
மருமகளின் செயலதனால்
மகன் பாசம் இழந்தவளே!
உன்போன்று ஒரு காலம்
மருமகளும் ஆவாளே!

ச.கிரோசிகா,
தரம் $8^{C}$ மாணவி,
அச்சுவேலி மத்திய கல்லூரி.

## MY SCHOOL

*The Name of my School is Chundukuli Girl's College. It is Situated in Jaffna. It is a Big School. It is One of the Leading Schools in Jaffna. The Name of the Principal of my School is Mrs.D.Thuseetharan. There are About Fifty Teachers on the Staff and Thousand and Five Hundred Students in my School. There are so much of Buildings in my School. There is a Play Ground, a Library, a Hostel, Science Labratories and Computer room in my School. I am proud of my School very much.*

**JENOSHA SIVAKUMAR -$7^{D}$**
**CHUNDIKULI GIRL'S COLLEGE**

"சுகவாழ்வே செல்வங்களில் சிறந்த செல்வம்"

### சிந்தனைத்துளி

"பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அனைத்தையும் வெளிப்படையாக்குவதே கூட்டுறவு, விளம்பரம்தான் கூட்டுறவின் முதல் நிபந்தனையாகும்"

-திக்கல்சன்-

## கற்பகக்கரு

## வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஆதங்கம்

*தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்திக்குக் கனிசமான பங்களிப்பைச் செய்துவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மதுசார உற்பத்தித் துறையில் மட்டும் தமது கவனத்தைச் செலுத்தாது ஏனைய துறைகளிலும் ஈடுபட்டுழைக்க வேண்டிய கட்டத்திற்கு காலம் கனிந்து வருவது இச் சங்கங்களின் எதிர்கால வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாக உள்ளது.*

*இவ்வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதுபோல் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், சங்கங்களின் பதிவாளருமான ஆ.சுப்பிரமணியசர்மா அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அமைந்துள்ளது.*

*யாழ் மாவட்டத்தில் தற்போது செயற்பட்டுவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடு அவ்வளவு போதுமானதாக இல்லை என்றும், அவை மென்மேலும் புதிய முயற்சிகளில் ஈடுபட்டு தனது அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டும் என்பதே ஆணையாளரின் ஆதங்கமாகும்.*

*பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே மதுசார உற்பத்தியில் மட்டும் தங்கியிராது அதன் மூலம் பெறக்கூடிய அனைத்து உற்பத்தி முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியே கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கருத்து வெளியிட்டுள்ளார். இன்றைய அசாதாரண சூழ்நிலையில் பனை வளத்திலிருந்து பெறக்கூடிய அத்தனை உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்து, அவரது கருத்தினை நிறைவேற்றுவதற்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அவசியம்.*

*எனவே ஆணையாளர் தெரிவித்த கருத்துக்களை வெறுமனே பேச்சாக மட்டும் எடுத்துகொள்ளாது அவர் கூறியதுபோல மாதிரி விற்பனை நிலையங்கள் பனம் பொருள் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய காட்சியகம் என்பவற்றை அமைப்பதற்கு உரிய சாத்தியக்கூற்று அறிக்கைகளை தயாரித்து அவற்றுக்குரிய அங்கீகாரங்களை பெற்று உரிய நிதியை ஆணையாளர் மூலமாக பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்து வதற்குமுரிய முன் முயற்சிகளை ஒவ்வொரு சங்கங்களும் எடுப்பதுடன், சமாசமும் அதற்கான பங்களிப்பினை வழங்கி, சங்கங்களின் முதுகெலும்பாக உள்ள அங்கத்தவர்களின் எதிர்கால சமூக, பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதுவே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் எதிர்பார்ப்பாகும்.*

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## வளர்ச்சிப் பாதையில் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்

எமது நாட்டில் சித்த வைத்திய மருந்துகள் சித்த வைத்தியர்களினால் அவர்களின் தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. 1983இல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் பின்னர் சித்த மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு இங்கு நிலவியது. மருந்துத் தட்டப்பாட்டினால் இலவச வைத்திய சாலைகள் இயங்கமுடியாமல் இருந்ததினால் ஏழை நோயாளர்கள் மிகவும் அவதிப் பட்டார்கள். இச்சூழ்நிலையில் தரமான மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் இத்தேவையை நிறைவு செய்யயாரும் முன்வரவில்லை. இந்நிலையில் கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு.தி.சபாரத்தினம் அவர்களுடைய அனுசரணையுடன் ப.தெ.வ.அ.கூ.சங்க அமைப்புக்கள் 1992ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் நாள் சித்த மருந்துகள் உற்பத்தி செய்ய கூட்டுறவு மருந்துச்சாலையை ஆரம்பித்தன.

ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் 20 வருடகால வரலாற்றிலே சித்த மருந்துகளை உற்பத்தி செய்யத் தொடங்கியது ஓர் திருப்பு முனையாகும். ஆரம்பத்தில் வட மாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசத்தினால் இம் மருந்துச்சாலை பொறுப்பேற்கப்பட்டது. பனை உற்பத்திப் பொருட்களாகிய வெல்லம், சீனி, பாணி, கல்லாக்காரம், மதுசாரம் ஆகியன மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டன. இக்கூட்டுறவுச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட கோபாம் மருந்துகள் சிறந்த தரமுடையனவாக காணப்பட்டமையால் அவை மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றதுடன், புகழ்மிக்க வைத்தியர்களின் பாராட்டினையும் பெற்றன. உலக கூட்டுறவு வரலாற்றிலேயே இதுவே முதலாவது சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கமாகும். அன்றைய யாழ்.அரச அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் அவர்கள் முதல் மருந்து விற்பனையை 12-08-1992ல் ஆரம்பித்து வைத்தார்கள். கைதடி அரசினர் வைத்தியாசலைக்கு கோபாம் மருந்துகளை விநியோகிக்க அவர் ஆவன செய்தார். மருந்துச்சாலையின் வளர்ச்சிக்கு சிரமம் பாராது தன்னாலான உதவிகளைச் செய்தார்.

இடப் பெயர்வினாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலினாலும் சங்கம் பல இழப்புக்களைச் சந்தித்த போதிலும் கூட்டுறவே நாட்டுயர்வு, மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதி தேவையான மருந்துகள், பலவித சிரமங்களுக்கு மத்தியிலும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் நோயினால் துன்பப்படுகின்ற, கஷ்டப்படுகின்ற கிராம மக்களுக்கு இலவசமாக நடமாடும் சித்த மருத்துவச் சேவையையும் சித்த மருத்துவ கண்காட்சிகளையும் நடாத்தி வருகின்றன.

உயிர் காக்கும் மருத்துவச் சேவையை வடமாகாணத்தில் சீராக இயங்குவதற்கு இலவச வைத்தியாசலைகளுக்கு மருந்துகளை விநியோகித்ததும் அல்லாமல் உள்ளாட்சி மன்றங்கள் நிதி நெருக்கடிகளைச் சந்தித்த போதெல்லாம் கடன் அடிப்படையில் மருந்துகளை விநியோகித்து அத்தியாவசிய வைத்திய சேவையை தடையின்றி நடைபெற சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது. இலாப நோக்கின்றி மக்கள் சேவையை இக்கூட்டுறவுச் சங்கம் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கூ.ப.யோகநாதன்
கல்வி உத்தியோகத்தர்,
சாவ.ப.தெ.வ.அ.கூ.சங்கம்



கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கம் அவர்களின் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி உரையாற்றுதையும் நூலினை கூ.அ.உதவி ஆணையாளரிடமிருந்து வடபிராந்திய மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் க.த.ஆனந்தராசா பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.

## குபேரன் நிலையான வைப்பு

யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தனது பத்து ஆண்டு நிறைவையொட்டி சமாசத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதி உயர் (18%) வட்டியுடன் கூடிய "குபேரன்" நிலையான வைப்புக் கணக்குத் திட்டத்தில் அங்கத்துவ சங்கங்கள், இணை அங்கத்துவ சங்கங்கள், ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஒத்துழைப்பு நல்குமாறு கூட்டறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மாவட்ட கூட்டுறவு அலுவலர்களாக பதவி உயர்வு

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திணைக்களத்தில் கடமையாற்றி வரும் நான்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களாக பதவி உயர்த்தப் பட்டுள்ளனர். சு.கணேஸ், என்.ராஜா, ஆர்.பாலச்சந்திரன், பி.மோகன் ஆகியோரே பதவி உயர்வு பெற்றவர்களாவர். இதேவேளை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் களாக கடமையாற்றி தற்போது ஓய்வுபெற்று சென்றுள்ள எஸ்.ஐயாத்துரை, செல்வி ஆர்.இராஜரட்ணம் ஆகிய இருவரும் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள நிலையில் அவர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளார்கள் என வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.



சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் பல்லசுட்டி காந்திஜீ முன்பள்ளி நிலையத்தினரின் பிரிவு உபசார விழாவின்போது பங்குபற்றிய மாணவர்கள், ஆசிரியர்கள், நிலைய நிர்வாகிகள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றார்கள்.

## திக்கம் வடிசாலை புனரமைப்பு

அங்கத்தவர் நலன்கருதி திக்கம் வடிசாலையை சுமார் 28 லட்ச ரூபாய் செலவில் புனரமைப்பதற்குவேண்டிய நடவடிக்கைகளை வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் மேற்கொண்டுள்ளது.

சமாசத்தின் பொதுச்சபையின் தீர்மானத்திற்கு அமைவாகவே இப்புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களை யாழ்.அரச அதிபர் மூலம் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளை சமாசம் மேற்கொண்டுள்ளது.

### புரிந்துணர்வு............

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு நிறுவனத்திலும் பணிபுரின்ற பணியாளர்க்ள மத்தியில் மனக் கசப்புகள், முரண்பாடுகள் ஏற்படுவது சகஜம். இவற்றில் எல்லாம் சிக்காது தமது கடமையை பணியாளர்கள் நிறுவன வளர்ச்சிக்காக ஆற்ற வேண்டும். பணியாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படும்போது நிறுவனத்தின் வளர்ச்சியை எவராலும் தடுத்துவிட முடியாது.

வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வானது ஊழியர்கள் மத்தியில் நிலவும் மனக்கசப்புகள், மற்றும் புரிந்துணர்வின்மை ஆகியவற்றை நீக்கி எல்லோரும் சந்தோசமான நிலையில் இருப்பதற்கு வாய்ப்பளிப்பதாக உள்ளது. இந்நிகழ்வில் பணியாளர்கள் தத்தமது கருத்துக்களையும் உள்ளக் கிடக்கைகளையும் பரிமாறிக் கொள்வதன்மூலம் மன ஆறுதலைப் பெறமுடியும். வருடம் முழுவதும் கஷ்டப்பட்டு நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துவரும் பணியாளர்கள் வருட இறுதியில் தமது கஷடங்களையெல்லாம் மறந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ப.தெ.வ. அ.கூ.சங்கங்களின் சமாசத்தின் பணியாளர் நலன்புரிச் சங்கமாக இச் சங்கம் செயற்பட்டு வந்தாலும் இத்தகைய ஒன்றுகூடல் நிகழ்வுகளுக்கு தனது பணியாளர்களுடன் மட்டும் நின்றுவிடாது அனைத்து சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து பெரிய நிகழ்வாக எதிர்காலத்தில் நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

நலன்புரிச் சங்கத் தலைவர் ஆ.செம்பொற்சோதி தலைமையுரையில், வரும் காலங்களில் இத்தகைய ஒன்றுகூடல் நிகழ்விற்கு சமாசம் அன்பளிப்பாக வழங்கும் நிதியை அதிகரித்து தர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் திக்கம் வடிசாலை முகாமையாளர் மு.நவநேசன், சமாச பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரட்ணம், கல்வி உத்தியோகத்தர் வ.சிவகுமார் ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

கற்பகம் மாதாந்த சஞ்சிகை மீண்டும் தவழ்ந்திட வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்!

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல: J/1574
19-02-1972

சங்கத்தின் சேவையில்

மக்கள் சேவை
பனை வெல்லம், பனஞ்சீனி, பனங் கற்கண்டு, உற்பத்தியும் விற்னையும்

கிராமிய வங்கிச் சேவை
- சேமிப்பு
- வைப்பு
- கடன் சேவைகள்

அங்கத்துவ நலத்திட்ட சேவை
கல்வி, மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு, மகளிர் பயிற்சிகள் பல பல்வேறு திட்டங்களூடாக

கல்வி ஊக்குவிப்புச் சேவை
CO-OP BOOK CENTRE
ஊடாக மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.